

நாளை உலகத் தாய்மொழி நாளையொட்டி நேற்று (20.2.2026) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை தலைவர் மு. அப்பாவு அவர்கள் தலைமையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களால் உலக தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (20.2.2026) சென்னை, நந்தனத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் மற்றும் சமூக வலைத்தள தன்னார்வலர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் தொழில் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உள்ளிட்ட கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் நினைவுப் பரிசு வழங்கினார்கள்.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.2.2026) சென்னை, நந்தனத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் மற்றும் சமூக வளைத்தன தன்னார்வலர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், "ஆடுகளம் ஒரே தலைவன் என்ற செயலியை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் மகேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்கள் கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் லெனின், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்கள், சென்னை தெற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன், செய்தி தொடர்பு துணைச் செயலாளர்கள் சூர்யா கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஹபிசுல்லா, திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் செல்வி மதிவதனி, மூத்த ஊடகவியலாளர் செந்தில் வேல் தலைமைக் கழக நிர்வாகிகள் தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.2.2026) சென்னை காமராஜர் அரங்கில் நடைபெற்ற, சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், 10வது மண்டலக் குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி – திருமதி கே. ரமணி தம்பதியரின் மகன் விஜய்கிரண் – கீர்த்தனா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள

# 2,664 வாக்குச்சாவடிகளிலும் மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று பரப்புரை செய்ய வேண்டும்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!



காஞ்சிபுரம், பிப்.21-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள 2,664 வாக்குச்சாவடிகளிலும்மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசு செய்த அளப்பரிய சாதனைகளை பெண்களிடம் விளக்கி கூறி பரப்புரை செய்ய வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

“பெண்களின் முன்னேற்றமே தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம்” எனும் கொள்கை உறுதியுடன்திராவிட மாடல் நல்லாட்சியில்‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’, ‘விடியல் பயணம்’ ‘தோழியர் விடுதிகள்’’புதுமை பெண் திட்டம்’ உள்ளிட்ட பல்வேறு மகளிருக்கான நலத்திட்டங்களையும் சாதனைகளையும்,

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும்மகளிரிடம் எடுத்துச் சென்று சேர்த்திட வேண்டும் என்ற நல்ல நோக்கில்,வெல்லும் தமிழ்ப் பெண்கள்ஸ்டாலினின் மகளிர் படை வீடு வீடாகச் சென்று பரப்புரை செய்திட வேண்டும் என்றுநம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்புக் கட்டளைக்கு இணங்க, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில்அடங்கி உள்ள2,664 வாக்குச்சாவடிகளிலும் நாளை மறுநாள் 23-ஆம் தேதி முதல் உலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதி வரை வெல்லும் தமிழ் பெண்கள் - ஸ்டாலினின் மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசு செய்த அளப்பரிய சாதனைகளை விளக்கி பரப்புரை மேற்கொள்ள உள்ளனர்.

அதையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வெல்லும் தமிழ் பெண்கள் வீடு வீடாக பரப்புரை செய்வதற்காக பயிற்சிக் கூட்டங்கள் இன்று மாவட்டம் முழுவதும்6 தொகுதிகளிலும் நடைபெறுகிறது.

இப்பிரச்சார பரப்புரைபிப்ரவரி 23 ஆம் தேதி தொடங்குகிறதுமார்ச் 8 ஆம் தேதி வரை14 நாட்கள் நடைபெறுகிறது.ஒரு நாளைக்கு 15 முதல் 20 வீடுகளுக்கு பரப்புரை செய்ய வேண்டும்.

பரப்புரைக்கு செல்லும் முன்னர்அந்தந்த பூத் குழுவில் உள்ள10 மகளிர் குழுவினரும் தலைமைக் கழகம் தந்துள்ள பேட்ஜை கட்டாயம்அணிந்து செல்ல வேண்டும்.தலைமைக் கழகம் தந்துள்ளடைரி மற்றும் வீடுகளில் ஒட்ட வேண்டிய ஸ்டிக்கர் உடன் எடுத்து செல்ல வேண்டும்

ஒவ்வொரு வீட்டிலும் உள்ளமகளிருக்கு டைரியை தரும் போதுஅந்த டைரியின்முதல் பக்கத்தில் உள்ளQR code - ஐ Scanசெய்யவேண்டும்.அப்படி Scanசெய்யும்போதுமுதலமைச்சரின் வீடியோ செய்தியைஅந்த வீட்டில் உள்ள மகளிரை பார்க்க செய்ய வேண்டும்.

அதன் பிறகுநம்முடைய முதல்வர் அவர்கள்5000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை அள்ளி வழங்கியதையும், இனி மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 மாக உயத்தப்படும் என்று உறுதி அளித்தையும் அவர்களிடம் எடுத்து கூறி,

வருகிற தேர்தலில்அப்பெண்ணையும் அவர்களதுகுடும்பத்தினரையும்நமக்கு ஆதரவு தர வேண்டும் என வலியுறுத்தி கூற வேண்டும்,பெண்களுக்கான இந்த நலத்திட்டங்கள் அனைத்தும் தொடர்வதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குஉங்களது ஆதரவை அளிக்க வேண்டும் என்பதையும்எடுத்து கூறிஅவர்கள் ஆதரவு தர94898 94840 என்ற எண்ணுக்குMissed call கொடுக்க சொல்லவேண்டும்.

அடுத்து அப்பெண்ணிடம் புகைப்படம் எடுக்க அனுமதி பெற்றுதரப்பட்டுள்ள டைரியின் நடுபக்கத்துடன்புகைப்படம் எடுத்துக் கொள்ளவேண்டும்அப்பெண் புகைப்படம் எடுக்க அனுமதி தராவிட்டால் வீட்டின் வெளியே வந்துஅந்த வீட்டின் கதவில் ஸ்டிக்கர் ஒட்டி புகைப்படம் எடுக்க வேண்டும்.

இறுதியாக அப்பெண்ணிடம்நேரம் ஒதுக்கியதற்காகநன்றியை தெரிவித்து விடைபெற்றுஅடுத்த வீட்டிற்கு பரப்புரைக்கு செல்ல வேண்டும்.

மேலும், அந்தந்த பூத்களில் வீடு வீடாகச் சென்று நடைபெறும் பரப்புரையில் அந்தந்த பூத்களில் அடங்கியுள்ள மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணிகளின் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாந கராட்சி - நகராட்சி - பேரூராட்சி - ஊராட்சி ஒன்றியம் - ஊராட்சி மன்றத் தலைவர்கள் உள்ளிட்ட பெண் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் பூத் மகளிர் குழுவினரிடம் இணைந்து இப்பரப்புரையில் வெற்றிகரமாக ஈடுப்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### சட்டப்பேரவையில் இருந்து பா.ஜ.க.வினர்

# அரசியல் நாடகத்தை நடத்தி வெளிநடப்பு செய்திருக்கின்றனர்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!



**தூத்துக்குடி, பிப்.21-**

**சட்டப்பேரவையிலிருந்து பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வெளிநடப்பு செய்தது குறித்த கேள்விக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அரசியல் நாடகத்தை நடத்தி வெளிநடப்பு செய்திருக்கின்றார் என்று குறிப்பிட்டார்.**

தூத்துக்குடி விமான நிலையத்தில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு :-

இடைக்கால பட்ஜெட்டில் எதிர்காலத் திட்டங்கள் எதுவுமில்லை எனக் கூறி பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தது குறித்த கேள்விக்கு, பொதுவாக இடைக்கால பட்ஜெட்டில் பெரிய அறிவிப்புகளும் வருவதில்லை. இருப்பினும், அவர் அதை முறையாகப் படித்துப் பார்த்தால், இளைஞர்களின் எதிர்காலத் தேவைகள், விளையாட்டு துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்குத் தேவையான முக்கிய அம்சங்கள் அதில் இடம்பெற்றுள்ளன. வெளிநடப்பு செய்ய வேண்டும் என்ற நோக்கில் ஏதாவது ஒரு அரசியல் நாடகத்தை அரங்கேற்றுவது சரியானதாக இருக்காது.

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக பாஜக கூறி வருவது குறித்த கேள்விக்கு, பாஜக தனது கூட்டணியைச் சரியாக வைத்துக் கொண்டாலே போதும்; அவர்கள் ஏன் மற்ற கூட்டணிகளைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள் எனத் தெரியவில்லை. திமுக - காங்கிரஸ் கூட்டணி பல ஆண்டுகளாக பலமாக நிலைத்திருக்கும் ஒரு கூட்டணி. இதில் எந்தவித மாற்றமும் வருவதற்கு வாய்ப்பே இல்லை.

மாநிலத்தையே கொண்டு போய் அடகு வைத்தவர் தான் எதிர்க்கட்சித் தலைவர். இன்னைக்கு நேற்று அல்ல; திமுகவின் அடிப்படை கொள்கையே ‘மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி’ என்பதே. ஒரு வேளை அவருக்கு இது தெரியாமல் இருக்கலாம் என்று விமர்சித்தார்.

### ‘Taps’ ஓய்வூதியத் திட்டம் மூலம் 23 ஆண்டு காலமாக கிடப்பில் கிடந்த –

# 13 லட்சம் அரசு ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றியவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!



**சென்னை, பிப். 21-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ‘Taps’ ஓய்வூதியத் திட்டம் மூலம் - 23 ஆண்டு காலமாக கிடப்பில் கிடந்த 13 லட்சம் அரசு ஊழியர்களின் கோரிக்கையை நிறை வேற்றியவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் - என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

**The mother of all manifesto regarding Government staff** அப்படியென்று பார்த்தீர்களென்றால், இந்த *pension scheme*தான் கிட்டத்தட்ட 22 வருடங்கள் கிடப்பில் போட்டு, இதில் யாரும் கை வைக்கமுடியாத கிணற்றில்போட்ட கல் மாதிரி இருக்கு என்று சொன்ன போது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள்தான் *Tamil Nadu Assured Pension Scheme* என்பதை கிட்டத்தட்ட 13 இலட்சம் பேர் நம்முடைய அரசு ஊழியர்கள் பணியில் இருக்கக்கூடியவர்கள், *retired* ஆனவர்களெல்லாம் பயன்பெறுகின்ற ஒரு மிகப் பெரிய திட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். *So,* இது *main* இதை நாங்கள் முடித்து விட்டோம்.

அடுத்தபடியாக பகுதி நேர ஆசிரியர்கள் சார்ந்து நாங்கள் ஏற்கெனவே ஒரு *discussion* நடத்திக்கொண்டிருக்கிறோம். மிக விரைவாக *G.O. pass* செய்ய இருக்கிறோம். அதில் அவர்களை எப்படியெல்லாம் *observe* செய்ய—யாரையும் அப்படியே விட்டுவிட்டுப் போவதில்லை. சட்டமன்றத்தில் நின்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், சொன்னதைச் செய்யக்கூடிய எங்களுடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிச்சயமாகச் செய்வார்கள். செய்வதற்கான *process* நடந்து கொண்டே இருக்கிறது. நான் மீண்டும் சொல்கிறேன், ஜூன் மாதம் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், வந்து இன்னும் என்னவெல்லாம் இருக்கிறதோ அதைச் செய்வதற்கு நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (20.02.2026) சென்னை, அடையாறு குமார ராஜா முத்தையா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் 654 அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 9 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.41.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 654 உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களை திறந்து வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.






சுதந்திரப் போராட்ட வீரர்கள்

மருது பாண்டியர்கள்

திருவுருவச் சிலைகள்

திறப்பு விழா

சிவகங்கை மாவட்டம், சூரக்குளத்தில் நிறுவப்பட்டுள்ள
மருது பாண்டியர்கள் திருவுருவச் சிலைகளை
காணொலிக்காட்சி வாயிலாகத் திறந்து வைப்பவர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மருது பாண்டியர்கள் திருவுருவச் சிலைகள், சூரக்குளம், சிவகங்கை மாவட்டம்

செ.ம.தொ.இ / 206 / வரைகலை / 2026

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெல்வோம் ஒன்றாக! வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009